

# ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக்கள்

## கார்த்திகை மாத வெளியீடு

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த**

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,111**

### உள்ளுறை


1. **இந்துவேதமும், இந்துமதமும் அருளப்பட்ட முத்தமிழ் மொழி** *(முத்தமிழ் மொழி என்பதற்கு உள்ள உண்மையான விளக்கம்)*

2. **1979இல் சித்தரடியான் ஒருவருக்குக் குருதேவர் எழுதிய இரு அறிவுரை அஞ்சல்கள்.** *(அடியான் ஒருவர் அருளாளராக வளரும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள், இந்தக் காலக்கட்டத்தில் நமது பணிநிலை என்ன என்பதற்குரிய விளக்கம்)*

3. **'செயல்விளக்க அறிவிப்பும் செயல்திட்டக் குருவாணையும்' - குருதேவர் எழுதிய அஞ்சல்வடிவக் கட்டுரை.** *(இந்திய அரசியலில் கம்யுனிசம் எப்படித் தோல்வி பெற்றது, அதை எப்படிச் சரி செய்வது என்பதற்குரிய விளக்கம்)*

4. **சித்தர்களின் ஏட்டில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி பற்றியுள்ள குறிப்பு.** *(குருதேவரின் சில அருட்பட்டங்கள்)*

5. **அன்புள்ள சேவுக! கட்டுரை அஞ்சல்.** *(குருதேவரின் தத்துவம், குறிக்கோள் பற்றிய விளக்கம்)*

6. **1995ஆம் ஆண்டு பொங்கல் வாழ்த்துச் செய்தி - "புறப்பட்டேன்".** *(வசன கவிதை நடையில் எழுதப்பட்ட சுருக்க விளக்கக் குறிப்பு)*

# இந்துவேதமும், இந்துமதமும் அருளப்பட்ட முத்தமிழ்மொழி

பதினெண்சித்தர்களின் தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி; 'முத்தமிழ்மொழி' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றுத் திகழ்வது பற்றிய காரணங்கள் இந்துவேதமான இருக்கு வேதத்தில் மிகமிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

அதாவது,

1. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான் எல்லா வகையான தரங்களையும், திரங்களையும், திறங்களையும் பெற்றுத் திகழ்கிறது என்பதனுல் **முத்தமிழ்மொழி** என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது' என்றும்;

2. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ்மொழியின் உயிரெழுத்துக்கள் எனப்படும் இம்மொழிக்கு உயிர்போன்ற எழுத்துக்கள்; குறில் என்றும் (குட்டெழுத்துக்கள்), நெடில் என்றும் (நெட்டெழுத்துக்கள்), ஆயுதம் (ஆயுத எழுத்து) என்று மூன்று பெரும் பகுப்புகளைப் பெற்றுத் திகழ்வதால் "**முத்தமிழ்மொழி**" என்று சிறப்பாகப் பாராட்டப் படுகிறது' என்றும்;

3. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ்மொழி மனிதர்கள் பெற்றுத் திகழும் ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றின் வடிவமைப்புக்களையும், வாழ்வியல் நிலைகளையும், இவை மூன்றும் இணைந்துதான் சீவன் உருவாகின்றது என்ற பேருண்மையினையும் தெள்ளத் தெளிவாக, துல்லியமாக, திட்டவட்டமாக, நுட்பமாக, வரையறுத்து ஒட்பத்துடன் விளக்குவதால் முத்தமிழ்மொழி என்று போற்றப் படுகின்றது என்றும், இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் மனிதரில் காணப்படுகின்ற ஆண், பெண், அலி என்ற மூன்று வகைப் பட்டவர்களுடைய சீவனை முறையே சீவலிங்கம், சத்திலிங்கம், இலிங்கம் என்று வகைப்படுத்திப் பெயரிட்டுக் காட்டப்படுகின்றன என்பதால் **முத்தமிழ்மொழி** என்று சீராட்டப் படுகின்றது' என்றும்;

5. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ்மொழியில்தான் மனிதருக்கு முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு என்ற மூன்று வகைப்பட்ட பிறப்புக்கள் உண்டு என்ற பேருண்மை திட்டவட்டமாக, அழுத்தந் திருத்தமாக, ஆணித்தரமாக விளக்கப்படுகிறது என்பதால் **முத்தமிழ்மொழி** என்று புகழப்படுகிறது' என்றும்;

6. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தை எப்போது இறக்கும்? எப்படியெப்படி வாழும்? என்னென்ன சாதனைகளை, போதனைகளையும் உருவாக்கும்? என்னென்ன வயதில் என்னென்ன வகையான இன்பங்களையும், துன்பங்களையும், இழப்புக்களையும், ஈட்டங்களையும், நன்மைகளையும், தீமைகளையும், அழிவுகளையும், செழிப்புகளையும், மெலிவுகளையும், வலிவுகளையும், நலிவுகளையும், பொலிவுகளையும், நோய்களையும், நொடிகளையும் பெற்றிடும்? ... என்று கணித்திடுவதற்குரிய ஐந்தர நூல்களையும், ஐந்திர நூல்களையும், ஐந்திற நூல்களையும் பெற்றுத் திகழ்கிறது என்பதால் **முத்தமிழ்மொழி** என்று சிறப்பாகக் குறிக்கப்படுகிறது என்றும்,

7. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் உயிர் (பசு), இறை (பதி), தளை (பாசம்) என்ற முப்பெரும் உண்மைகள் சான்றுகளோடும், ஊன்றுகளோடும் தெள்ளத் தெளிவாக விளக்கப்படுகிறது என்பதால் **முத்தமிழ்மொழி** என்று புகழ்ந்து போற்றிக் குறிக்கப்படுகிறது' என்றும்;

8) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் அருளுலகச் சத்தியினை, உள்ளத்து உணர்வினைப் பெறும் சத்தி (இச்சா சத்தி), உடலின் உழைப்பால் பெறும் சத்தி (கிரியா சத்தி), அறிவின் உழைப்பால் பெறும் சத்தி (ஞான சத்தி) என்று மூன்று பெரும் வகையாகப் பகுத்துக் காட்டப்படுகிறது என்பதால் **முத்தமிழ் மொழி** என்று சீராட்டிப் பாராட்டப்படுகிறது' என்றும்;

9) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் மனித வாழ்க்கையில் துய்க்கக்கூடிய, துய்ப்பதற்குரிய பக்குவமான போகநிலை ஒருவனுக்கு உருவாவதற்கு அவனுடைய ஓகநிலை, யோகநிலை, மோகநிலை என்ற மூன்றும் உரிய அளவு அமைய

வேண்டும் அல்லது பெரிய அளவு அமைய வேண்டும் அல்லது உருவாக்கப்பட வேண்டும் அல்லது அமைக்கப்பட வேண்டும் என்ற விளக்கம் வழங்கப் படுவதால்; அதாவது செந்தமிழ் மொழியில்தான் ஓகநிலே, யோகநிலே, மோகநிலே என்ற மூன்றும் தனித்தனியாகப் பிரித்து விளக்கப்படுகிறது அல்லது இந்த மூன்றும் சரியான அளவில் சரியான பக்குவத்தில் உரிய முறைகளிலொன்று சேர்ந்துதான் போகநிலே உருவாகிறது என்ற முப்பெரும் கொள்கை, முப்பெரும் பேருண்மை அல்லது முப்பெரும் தத்துவம் விளக்கப் படுவதால்தான் **முத்தமிழ் மொழி** என்று பாராட்டிச் சீராட்டப்படுகிறது' என்றும்,

10) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான்; மனிதன் செலுத்துகின்ற பத்திக்குரிய பயன் சத்தி, சித்தி, முத்தி என்ற மூன்று கட்டங்களில் கிடைக்கின்றன அல்லது மனிதன் முத்தி பெறுவதற்கு அதாவது முழுமை பெறுவதற்கு பத்தி, சத்தி, சித்தி என்ற மூன்று நிலேகளே அல்லது படிகளேக் கடந்தாக வேண்டும் என்று அருளுலகச் செயல்நிலேயில் உள்ள முப்பெரும் நிலேகளே பத்தியை அடிப்படையாகக் கொண்டும் விளக்கப் படுவதால்தான் **முத்தமிழ் மொழி** என்று புகழ்ந்து பாராட்டப்படுகிறது' என்றும்,

11) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான்; மனித வாழ்க்கையில் மனிதன் ஆற்றுகின்ற செயல்கள் அதாவது செய்கின்ற விீனகள் 'ஆள்விீன' எனப் பெயரிடப்படுகிறது. இந்த ஆள்விீன மனிதனுடைய ஏட்டறிவிஞலோ, பட்டறிவிஞலோ, தொடர் முயற்சியாலோ வெற்றி பெறுவதில்லே, முழுமை பெறுவதில்லே என்பதுதான் உண்மை. இந்த உண்மையை மிகத் தெளிவாக 'ஆள்விீன' என்பது ஊழ்விீன, விதி, சூழ்விீன என்ற மூன்ருல்தான் வெற்றி பெறுகிறது, முழுமை பெறுகிறது என்று திட்டவட்டமாக, தெளிவாக, விளக்கமாக வரையறை செய்து கூறுவதால்தான் **முத்தமிழ்மொழி** என்று போற்றிப் புகழ்ந்து சீராட்டப்படுகிறது' என்றும்,

12) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் பொருளுலகப் பயன்களுக்காக இருநூற்று நாற்பத்தேழு (247) எழுத்துக்கள் என்ற ஒரு வகையும், அருளுலகப் பயன்களுக்காக எழுபத்தைந்து (75) எழுத்துக்கள் என்ற ஒரு வகையும், பொருளுலக அருளுலக ஆட்சியிீன என்றென்றும் செய்யும் அல்லது நிகழ்த்தும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்கென ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், இரங்கல் என்ற ஐந்தொழிலேயும் செய்யும் எல்லா வல்லமைகளேயும் பெற்ற பரபிரம எழுத்தென ஒரே ஓர் எழுத்தென்ற ஒருவகையும் ஆக மூன்று வகைப்பட்ட எழுத்துக்கள்; இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிக்குரிய முந்நூற்றி இருபத்தி மூன்று எழுத்துக்களில் இருக்கின்ற காரணத்திஞல்தான் **முத்தமிழ்மொழி** என்ற தனித்த சிறப்பையும், பெருமையையும், சீராட்டையும், பாராட்டையும் பெற்றுத் திகழ்கிறது' என்றும்;

13. 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இந்துவேதம் எனும் இருக்கு வேதத்தின் உரைக்கோவைகள் பயன்படுத்தப்பட வேண்டிய நெறிமுறைகள் அடிப்படையில் 1) காதுக்குள் மட்டும் வாய்மொழி வாக்காக அதாவது வாய் உரையாக அருளப்பட வேண்டிய இந்துவேத உரைக்கோவைகள் **வாக்குகள்** என்றும், 2) குருவாக இருப்பவர்கள் மாணுக்கரின் பக்குவமறிந்து மழையில் எழுதிக் காட்டியோ அல்லது தரையில் தண்ணீரால் எழுதிக் காட்டியோ சீக்கிரமாக மாணவன் மனதில் நிலேநிறுத்திக் கொள்ள மட்டுமே வாய்ப்புக் கொடுத்து உடனுக்குடன் அழித்துவிட வேண்டிய இந்துவேத உரைக்கோவைகளே **வாக்கியங்கள்** என்றும்; 3) இந்துவேதப் பேருண்மைகளில் எல்லோரும் யார்மூலம் வேண்டுமாஞலும் தெரிந்து கொள்வதற்காக நிலேயாக ஏடுகளில் வெளிப்படையாக எழுதி வைத்திருக்கக் கூடிய இந்துவேத உரைக்கோவைகளே **வாசகங்கள்** என்றும் மூன்று தனித்த பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளதால்தான் **முத்தமிழ்மொழி** என்று குறிப்பாக தனித்து சிறப்பித்துப் பாராட்டி சீராட்டிப் போற்றிப் புகழப்படுகிறது' என்றும்;

14) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ்மொழியில்தான் இந்துமதத்தில் எல்லா மக்களும் எளிதாகப் பத்தி செய்து தங்களுக்குத் தேவையான சத்தி, சித்தி, முத்திகளேப் பெறுவதற்காக கந்தழிநிலே ஓம்பல் (வழிபடல்), வள்ளிநிலே ஓம்பல், கொடிநிலே ஓம்பல் என்று இயற்கையாக உள்ள முப்பெரும் சுடர்களே, முப்பெரும் நெருப்புகளே, முப்பெரும் தீகளே வழிபடும் நெறிமுறைக்குரிய மூன்று வகைப்பட்ட ஓம்பலுக்குரியவைகள் முத்தீ ஓம்பல் இலக்கியங்களாக தனித்தனியாக வழங்கப்

பட்டிருப்பதால்தான் **முத்தமிழ்மொழி** என்று சிறப்பித்துப் பாராட்டி சீராட்டி போற்றிப் புகழப்படுகிறது' என்றும்;

15) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான், கல்வியில் பொருளுலக வாழ்வுக்குரியவைகளைச் சொல்லித் தருகின்ற ஆசிரியரின் மொழிநிலை என்றும், கல்வியில் அருளுலக வாழ்வுக்குரியவைகளை சொல்லித் தருகின்ற குருவின் மொழிநிலை என்றும், கல்வியில் பொருளுலக அருளுலகக் கல்வியை செய்முறையாகப் பயிற்றுவிக்கின்ற வாத்தியாரின் மொழிநிலை என்றும் மூன்று வகைப்பட்ட மொழிநிலைகள் இந்துவேதத்தின் முந்நூற்றுத் தொண்ணூற்ருறு (396) நூல்களிலும், இந்துமதத்தின் முப்பத்தாறு (36) நூல்களிலும் திட்டவட்டமாக மிக நுட்பத்தோடு தனித்தனியாகப் பிரித்து வகைப்படுத்தி தெள்ளத் தெளிவாக விளக்கப் பட்டிருப்பதால்தான் **முத்தமிழ் மொழி** என்று குறிப்பாக சீராட்டி பாராட்டி போற்றிப் புகழப் படுகிறது' என்றும்;

16) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீக செந்தமிழ் மொழியில்தான், உலக மக்கள் அனைவருக்கும் உரிய பொதுவேதம், மூலவேதம், முதல்வேதம், கடவுளர்களாலேயே எழுதித் தரப்படும் வேதம் என்று பாராட்டப்படும் இந்துவேதத்திலும், இந்துவேத மதமான இந்துமதத்திலும், தமிழ் மொழியின் எழுத்துக்களில் மூன்றுவகை, தமிழ்மொழியை மாணுக்கரிடம் கூறுவதில் மூன்றுவகை, தமிழ்மொழியைப் பயன்படுத்துகின்ற ஆசிரியர், குரு, வாத்தியார் என்ற மூவரும் பயன்படுத்துகின்ற தமிழில் மூன்று வகை என்ற பாகுபாடுகள், வேறுபாடுகள், பிரிவுகள் வரையறை செய்யப் பட்டுள்ளன. இவற்றிற்கெல்லாம் மேலாக அருளுலகப் பொருளுலகச் செல்வங்களை அறிவுறுத்தி வழங்குவதில் இட்டு வழங்குகின்ற நெறிமுறைக்குரிய தமிழ்மொழி என்று ஒருவகையும், தொட்டு வழங்குகின்ற நெறிமுறைக்குரிய தமிழ்மொழி என்று ஒருவகையும், சுட்டி வழங்குகின்ற நெறிமுறைக்குரிய தமிழ்மொழி என்று ஒருவகையும் என்று மூன்றுவகையாக தமிழ்மொழி பிரித்துக் காட்டப்பட்டுள்ளதால் **முத்தமிழ்மொழி** என்று சீராட்டி, பாராட்டி சிறப்பித்துப் போற்றப்படுகிறது' என்றும்;

17) 'இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான்; இம்மண்ணுலகில் எழுதப்படுகின்ற இலக்கியங்கள் அனைத்துக்கும் வழிகாட்டியாக, அடிப்படைகளாக, நெறிகாட்டிகளாக, முறை விளக்கிகளாக, அண்ட பேரண்டங்களில் வளரும், வளர்ந்திட்ட, வளர்ந்து கொண்டிருக்கின்ற, வளரப் போகின்ற முத்தமிழ் மொழியின் இலக்கியங்களின் தொகுப்புகளாக; மூன்று வகைப்பட்ட இலக்கியங்கள்; (1) உலகியல் வாழ்வியல்களை, அதாவது பொருளியல் வாழ்வியல்களை விளக்குகின்ற இலக்கியங்கள் **மேல்கணக்கு இலக்கியங்கள்** என்றும், (2) பொருளியல் வாழ்வியலுக்குத் தேவையான நேம, நியம, நிடத, நிட்டை, நீதி, விதி முதலியவைகளை விளக்குகின்ற இலக்கியங்கள் **கீழ்கணக்கு இலக்கியங்கள்** என்றும், (3) அருளுலக வாழ்வியலுக்குத் தேவையான வேதத்தை விளக்குகின்ற இலக்கியங்களும், மதத்தை விளக்குகின்ற இலக்கியங்களும் **மையக்கணக்கு இலக்கியங்கள்** என்றும்; மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால், ஒவ்வொரு வகைக்கும் பதினெண் சித்தர்களை நினைவு கூர்ந்திடுவதற்காக பரந்து விரிந்துபட்ட அண்டபேரண்ட அருளாட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியின் இலக்கிய பரப்புக்களிலிருந்து, குவியல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கியங்களின் தொகுப்பாக பதினெண் மேல்கணக்கு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், பதினெண் மையக்கணக்கு நூல்கள் என்று மூன்று வகைப்பட்ட தொகை நூல்கள் தயாரிக்கப்பட்டு; முத்தமிழ்ச் சங்கத்தின் மூலம் இம்மண்ணுலகுக்கு வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், பதினெண் மேல்கணக்கு நூல்களும், கீழ்க்கணக்கு நூல்களுமே முத்தமிழ்ச் சங்கத்தில் மிகுதியாகக் கற்பிக்கப்பட்டன. இந்த பதினெண் மையக்கணக்கு நூல்கள் பதினெண்சித்தர் மடத்திலும், பீடத்திலுமே கற்பிக்கப் பட்டன. அதிலும், குறிப்பாக, இந்தப் பதினெண் மையக்கணக்கு நூல்களில் வேதத்தைப் பற்றிய நூல்கள் பதினெண்சித்தர் மடத்திலும், மதத்தைப் பற்றிய நூல்கள் பதினெண்சித்தர் பீடத்திலும் கற்பிக்கப்பட்டன. இப்படி பதினெண் மேல்கணக்கு, கீழ்கணக்கு, மையக் கணக்கு நூல்களைக் கற்பிப்பதற்கு முத்தமிழ்ச் சங்கம், பதினெண்சித்தர் மடம், பதினெண்சித்தர் பீடம் என்ற மூன்று வகைப்பட்ட நிறுவன நிர்வாகங்கள் தோற்றுவிக்கப் பட்டிருந்தன என்பதும் சிறப்பாகப் போற்றிப் புகழ்வதற்குரியதாகும்.

18) இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான், இலக்கணப் பகுப்பு

1. எழுத்திலக்கணம் (எழுத்து + இலக்கணம்)

2. சொல்லிலக்கணம் (சொல் + இலக்கணம்)

3. பொருளிலக்கணம் (பொருள் + இலக்கணம்)

என்று மூன்று பெரும் பகுப்புக்களாக பகுக்கப்பட்டு தனிப்பெரும் இலக்கணப் பகுதிகளாக வளர்க்கப் பட்டிருக்கின்றன, வளர்க்கப் பட்டிருக்கின்றன, வளர்க்கப் பட்டிருக்கின்றன. இதுபோல், இம்மண்ணுலகில் எம்மொழிக்கும் இலக்கணப் பகுப்பு அமைக்க இயலாது, அமைக்க முடியாது என்ற தனிச்சிறப்பால்தான் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி முத்தமிழ் மொழி என்று சிறப்பித்துப் போற்றிப் பாராட்டி புகழப்படுகிறது. இம்மட்டின்றி, இம் முத்தமிழ்மொழியின் இலக்கியங்கள் 1) வாழ்வியலில் நடைமுறையில் எளிதாகப் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வளர்க்கப்படும் உரைநடைத் தமிழ் இலக்கியங்கள் மட்டும் **'இயல்'** இலக்கியங்கள் என்று தனித்துப் பிரிக்கப்பட்டும், 2) வாழ்வியல் உணர்வுகளையும் கருத்துக்களையும் சுவைகூட்டி நீட்டிக் குறைத்து பல்வேறு வகையான ஒலிநயங்களோடு இனிய இசையாகப் பாடி வளர்க்கப்படும் இசைத் தமிழ் இலக்கியங்கள் மட்டும் **'இசை'** இலக்கியங்கள் என்று தனித்துப் பிரிக்கப்பட்டும், 3) வாழ்வியல் நிகழ்ச்சிகள், கருத்துக்கள், செய்திகள் முதலியவற்றை விளக்கிட உரைநடையும், இசையும் கலந்து இவற்றிற்கேற்ப உடலை வளைத்து, நெளித்து அங்கங்களை ஆட்டி பல்வேறு கதியில் குதித்தும் ஆடுகின்ற நாட்டியமும் கலந்து வளர்க்கப்படும் நாடகத் தமிழ் இலக்கியங்கள் மட்டும் **'நாடக'** இலக்கியங்கள் என்று தனித்துப் பிரிக்கப்பட்டும் மூன்று வகைத் தமிழ்கள் முப்பெரும் தனிப்பிரிவுகளாக வளர்க்கப்படும் மரபு அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் மட்டுமே இருப்பதால் **முத்தமிழ்மொழி** என்று சிறப்பித்துப் பாராட்டி, சீராட்டிப் போற்றிப் புகழப்படுகிறது.

இப்படியாக அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி முத்தமிழ்மொழி என்று குறிக்கப் படுவதற்குரிய, பெயரிடப் படுவதற்குரிய, சிறப்பிக்கப் படுவதற்குரிய, சீராட்டப்படுவதற்குரிய, பாராட்டப் படுவதற்குரிய காரணங்கள் பதினெட்டு காரணங்களாக, பதினெண்சித்தர்களின் எண்ணிக்கையைக் குறிக்கும் வண்ணம் பட்டியலிடப்பட்டு இந்துவேதத்தில் காட்டப் படுகின்றன.

--------------------------------

# அருள்மிகு சித்தரடியான் கு. சத்தியமூர்த்தி அவர்களுக்கு குருதேவர் எழுதிய அஞ்சலின் ஒரு பகுதி:

அம்பத்தூர்

22.11.79 7.45PM

..... ..... ..... ..... .....

**சிறப்புக் குறிப்பு:- [குருதேவர் சொல்ல எழுதுவது]**

1) தாங்கள் 'சோழப் பெருமண்டலத்தின் குருவாணை ஓலைநாயகம்' என்ற பதவிக்குரிய தரத்தையும், திறத்தையும், உரத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இனித் தங்களின் உதடு உதிர்க்கும் ஒவ்வொரு சொல்லும் சட்டப் பூர்வமானதாக, அதிகாரப் பூர்வமானதாக உதிர்க்கப்படுவது என்பதை உணர்ந்து அடக்கமாக, சுருக்கமாகப் பேசிப் பழக வேண்டும். உணர்வு வயப்பட்டோ, கேலிக்கைக்காகவோ, கேளிக்கைக்காகவோ, பிறரை நம்பவைக்க வேண்டும் என்பதற்காகவோ அனுவசியமாகச் சொற்களை உதிர்க்கக் கூடாது. சொற்களை அளந்து பேசாவிட்டால் ஆற்றலைப் படிப்படியாக இழந்து 'ஏசுநாதர்' போன்ற நிலையை அடைய நேரிடும். இந்த அஞ்சல் கிடைத்தது முதல் பதினெட்டாண்டு களுக்கு தங்களுக்கு அருள் ஊறும். ஆற்றல் வளரும். இந்த பதினெட்டாண்டுகளாகச் சேர்த்து வைக்கக் கூடிய சத்திகள்தான் வாழ்நாள் முழுவதும் செலவழிக்கப் பயன்படக் கூடியது. அதாவது கோடைக்காலத்தில் உலர்ந்த இலைச் சருகுகளை நிறையச் சேர்த்து வைத்தால்தான் குளிர்காலத்தில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனை உணராமல் கோடைக்காலத்திலேயே சேகரிக்கும் உலர்ந்த சருகுகளை விளையாட்டாக எரித்து வீணாக்கிடுகின்றவர்கள் குளிர்காலத்தில் சிரமப்பட வேண்டிடும். இதற்குமேல் விளக்கம் தேவையில்லை. இந்த அறிவுரையை எல்லோருக்கும் கூறுங்கள்.

2) தாங்கள் 'கருப்பழகி சன்னிதானம்' ஆக சத்தி பீடத்தில் அமர்ந்திருப்பதால் நல்ல மஞ்சளில் செய்யப்பட்ட குங்குமப் பொட்டு அடிக்கடி நெற்றியில் வைத்துக் கொள்ளவும். தாங்களே தங்களுடைய உள்மனத்தை குருவின் பிரதிநிதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அதற்குத் துணையாக பல்லி சொல்வதை ஏற்க வேண்டும்.

3) தாங்கள் இனித் தாத்தாக்களின் ஆத்தாக்களின் திருவுளப் பணியை நிறைவேற்றும் அடியான்களையும், அடியார்களையும் உருவாக்குவதில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். அனாவசியமாக யாரிடமும் தெய்வீகப் பேருண்மைகளை தெரிவிக்க வேண்டாம். நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரையும் நன்கு எடையிட்டுக் கணித்துப் பொறுமையுடனும், பொறுப்புடனும் உரையாற்ற வேண்டும்.

4) சித்தர்களின் தத்துவங்களைச் செயலாக்கக் கட்டுப்பாடு மிகுந்த தலைமைக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து செயல்படுகின்ற வீரமும், தீரமும், தியாகமும், தன்னலமின்மையும், தன்னம்பிக்கையும், துணிவும், பணிவும் உடைய புரட்சி வீரர்கள் உருவாக்கப்பட்டு வருகின்ற காலம் இது. எனவே, குரு எதைச் சொல்லுகிறாரோ அதை அப்படியே ஏற்று நடத்திச் செயல்படுகின்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஐயவினா, அறிவு வினா, சொந்த விருப்பு வெறுப்பு, குருதேவரின் ஆணைக்கு முன் அகன்றிடல் வேண்டும். விளக்கம் பெறுகின்ற காலம் வேறு; செயல்பட வேண்டிய காலம் வேறு என உணர்ந்து செயல்பட வேண்டும்.

5) பகுத்தறிவும், அறிவியலும், தெய்வீகமும் கலக்கப் பெற்ற ஒரு மாபெரும் புரட்சி நிகழப் போகிற காலக்கட்டமிது. தனிநபர்களை விழிச்சிப் பெறச் செய்யவும், சமுதாயத்தை எழுச்சிப் பெறச் செய்யவும், அரசியலை மறுமலர்ச்சி கொள்ளச் செய்யவும் உலகம் கண்டிராத கருத்துப் புரட்சி ஒன்று கருவாகி உருவாகி வருகின்ற கால கட்டமிது. இதில் தங்களுக்கு ஓர் அரிய, பெரிய, சீரிய பங்கு உண்டு என்பதை நம்பி, உணர்ந்து, புரிந்து செயல்பட வேண்டியவர்கள் நீங்கள்.

6) குரு அறிவுரை வழங்குகின்றாரா? விதிமுறைகளை வழங்குகின்றாரா? செயல்முறைகளை வழங்குகின்றாரா? ஆணைகளை வழங்குகின்றாரா? என்பதை எப்போதும் விழிப்புணர்வோடு இருந்து புரிந்து செயல்பட வேண்டும்.

7) ஒரு மாபெரும் பேரரசை உருவாக்கிய பதின்மூராவது பதினெண்சித்தர் பீடாதிபதியே முழுமையான வெற்றியைப் பெறமுடியவில்லை என்ற அச்ச உணர்வு அனைவருக்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வீணான வாதப் பிரதிவாதங்களோ, சவால்களோ, ஆடம்பரங்களோ, ஆரவாரங்களோ, விளம்பரங்களோ செய்து கொள்ளாமல் எளிமையுடனும், அமைதியுடனும், பொறுமையுடனேடும், சுறுசுறுப்புடனேடும் செயல்பட வேண்டும். கருத்து மாறுபாடுகள் ஏற்படும்போது காலமும் அனுபவமும் அவரவர்கள் திருத்தட்டும் என்று விட்டுவிட வேண்டும். யாருக்காகவும், எதற்காகவும், எதுக்காகவும் காத்திருக்காமல், தயக்கம் காட்டாமல், மயக்கம் கொள்ளாமல், தளர்ச்சி யடையாமல், கிளர்ச்சி யடையாமல் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பாராமல் தொடர்ந்து செயல்படப் பழகிக் கொள்ளுங்கள்.

8) நம்மோடு எத்தனை பேர் வருகின்றார்கள் என்பதைப் பொறுத்ததல்ல நம்முடைய வெற்றி. ஏனெனில் நாம் எதையும் செயல்வடிவில் சாதித்து முடிக்க நினைப்பவர்கள் அல்ல. நம்முடைய பணியெல்லாம் தமிழினப் பகைவர்களும், காலமும், சோம்பலும், தன்னலமும், குறுகிய நோக்கமும், அற்பச் சிந்தையும், ஆணவ நெஞ்சமும் குறைத்திட்ட, மறைத்திட்ட, மறந்து போகச் செய்திட்ட, இறந்து போகச் செய்திட்ட அனைத்தையும் புத்தகங்களாக வெளியிடுவதும், சொற்பொழிவுகளாக வெளிவிடுவதும், இனிய இசைப் பாடல்களாக வெளியிடுவதும், சுவைமிக்க கூத்துக்களாக வெளியிடுவதுமேயாகும். நாம் கூறுகின்றவை வரலாற்றுப்படி உண்மையானவையா? அறிவியல் படி சரியானவையா? மானுட இயல்படி முறையானவையா? சமுதாய இயல்படி தேவையானவையா? என்பனவற்றை ஆராய்ந்து அறிந்து முடிவு கட்டி நம்காலத்தவரிடமும், வருங்காலச் சந்ததியாரிடமும் நம் பணியெல்லாம் திட்டமிட்டு கட்டுக்கோப்பாக பதினெண்சித்தர்களும், மற்ற சித்தர்களும் மானுட இனத்தினருக்காக வழங்கியவற்றை மீண்டும் நினைவுபடுத்துவதாகும்.

-- இவையனைத்தையும் பலநகல்கள் எடுத்துத் தங்களுக்கு அறிமுகமான அனைவருக்கும் தொடர்ந்து அனுப்பிக் கொண்டேயிருக்கவும். உடனடியாக மதுரை, திருச்சி, சென்னை, தஞ்சை, துறையூர் முதலிய இடங்களுக்கு நகல்கள் அனுப்பவும். குறிப்பாக, தாத்தா சன்னிதியில் அறிமுகமான அனைவருக்கும் தரவும். முடிந்தால் Type அடித்து cyclostyle செய்யவும்.

அன்பு

கவிக்குமார்



பொன்னேரி
10.12.1979

## அருள்மிகு கருப்பழகி சன்னிதானம், சோழப் பெருமண்டல குருவாணை ஓலைநாயகம் அவர்களுக்கு குருதேவர் சொல்ல துணைக் குருவாணை ஓலைநாயகம் எழுதுவது.

1) தாங்கள் தங்களுக்கு அனுப்பப்பட்ட ஆணைகளையும்; அகத்தியர் ஞானசபைக்காக அனுப்பப்பட்ட ஆணைகளையும் நகலெடுத்து இன்னும் திருநாவுக்கரசு அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பவில்லை என்பது குறித்து பெரிதும் கவலைப்பட வேண்டியிருக்கிறது. ஒரு மாபெரும் பொறுப்பிலும், ஒரு பணியிலும் உள்ள தாங்கள் இதுபோல காலதாமதம் செய்தல் கூடாது. எதையும் பொறுப்புடனும், சுறுசுறுப்புடனும், விறுவிறுப்புடனும் உடனுக்குடன் செய்து முடிக்கின்ற தரமும், திறமும், உரமும், மறமும் தங்களுக்கு இருந்தே ஆக வேண்டும்.

இனிய நண்ப! அகத்தியர் ஞான சபையைச் சேர்ந்தவர்கள் நமது குருதேவரிடமிருந்து நேரடியான பதில் வர எதிர்பார்க்கிறார்கள் என்று தாங்கள் குறித்துள்ளீர்கள். அது ஒன்றும் சாதாரணமான முடிவு அல்ல. ஏனெனில் நமது குருதேவர் எதனையும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் விருப்பம் கேட்டே செயல்படக் கூடியவர். அதாவது திருவுள ஒப்புதலும் குருவாணையும் இன்றி நமது குருதேவர் யாருக்கும் மடல் கொடுப்பதில்லை. இதனை அவர்களுக்குத் தெளிவாகவும், முடிவாகவும் தெரிவித்து விடுங்கள். அவர்கள் சாதாரண சமய விருப்பாளர்களாகவும், பொதுத் தொண்டு ஆர்வலர்களாகவும் இருந்தே பழகியவர்கள். தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் ஏட்டளவில் கண்டு நிறைவு காணுகிறவர்களாகவே வாழுகிறார்கள் இவர்கள். இருப்பினும் புராணங்கள், இதிகாசங்கள், மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள், ஆகமங்கள், குருவாசகங்கள், கருவறைச் சூத்திரங்கள், மெய்ஞ்ஞானப் படிகள், எந்திர சாத்திறங்கள், தோத்திறங்கள், மந்திரங்கள், உயிர்ப்பு நூல்கள், மெய்ஞ்ஞான நாடிகள், அருள்விளக்கச் சூத்திறங்கள், சாத்திற விளக்க உரைகள், திருமுறைகள் ... ... என்று இப்படி எண்ணற்ற வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ள இலக்கியங்களின் பட்டியல் சாதாரண சமயவாதிகளுக்கு பெருவிருந்தாகிவிடும். ஆனால் மேற்கூறியவைகளைச் செயல்வடிவில் வழங்கிடும் சித்தர்களும் அவர்தம் அடியான்களும், அடியார்களும், சமய சமுதாய அரசியல் துறைகள் அனைத்துக்கும் அருமருந்தாவர். இவற்றை இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழுகின்ற மக்கள் பெருந்திரளின் ஒரு பகுதியாவது உணர்ந்து செயல்பட்டிடும்படி செய்யும் மாபெரும் பணியில் பங்கு கொள்ளுமாறு பிறரை அழைக்கும் முயற்சியே நமது முயற்சி. இதில் மரியாதை முறைகளோ, சம்பிறதாயங்களோ, சாதாரணமான உலகியல் பழக்க வழக்கங்களோ அதிகமாக இடம்பெறத் தேவையில்லை.

அகத்தியர் ஞான சபையினருக்காக 'தமிழர் சமய வரலாறு' ஒன்று எழுதப்பட்டு வருகின்றது. இது முழுமையான இலக்கியச் சான்றுகளோடும், ஊன்றுகளோடும், கால அறிவியலோடும் எழுதப்பட்டு வருகின்றது. எனவே, இந்த ஒரு நூல் அவர்களால் வெளியிடப்பட்டாலே போதும். அவர்கள் வாழ்நாள் முழுதும் சமயத்துக்கும், சமுதாயத்துக்கும் ஆற்றிடக்கூடிய தொண்டால் விளையும் பயனைவிட பலகோடி மடங்கு பயன் விளைந்திடும். நம் காலத்தில் எத்தனையோ அமைப்புகளும், தனிநபர்களும் சமயப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். ஆனால், எவருமே காலக் கணக்கீட்டு முறையோடு கூடிய வரலாற்று அடிப்படையோடும், இலக்கிய வளத்தோடும், அறிவியல் நோக்கோடும், இக்காலப் புதுமை நாட்ட உணர்வோடும் சமயப் பணியில் ஈடுபடவில்லை. இந்த நிலையில் சமயப் பணி எத்தனைப் பெரியதாக ஆற்றிட்டாலும் அது நீர் மேல் தோன்றும் குமிழி போல் அழிந்திடும். நமது சமய வரலாறு எண்ணற்ற சமயங்களோடு போராடி வளர்ந்த ஒன்று. நமது சமய வளர்ச்சியில் எத்தனையோ மாறுதல்களும், வேறுபாடுகளும், முரண்பாடுகளும் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் காலத்தால் உலர்ந்த சருகுகளாக உதிர்ந்திருக்கின்றன. உலர்ந்தவைகளையும், உதிர்ந்தவைகளையும் உரமாக்கிக் கொண்டு துளிர்விட்டு காலங்கள் தோறும் மிளிர்ச்சிமிக்க வளர்ச்சி பெற்றிட்ட ஒன்றே நமது சமயம். இதனை உணராமல் பலர் நமது சமய மரபுகளையும், ஒழுகலாறுகளையும், உயரிய குறிக்கோள்களையும் காட்டுமிராண்டித்தனமான கற்பனை என்றும், பயனில்லா பகற்கனவு என்றும், தேவையில்லாத உணர்வுகள் என்றும் இழித்தும், பழித்தும் கூறிவர நேரிட்டு விட்டது. இவற்றைப் பார்க்கும் போதுதான் நமது முதற்பணி அறிவியல் அடிப்படையில், காலக்கணக்கீட்டு அடிப்படையில், இலக்கியங்களின் துணையில் உண்மையான, முழுமையான, முறையான ஒரு சமய வரலாற்றை உடனடியாக உருவாக்கும் ஒரு பெரும் பணியில் ஈடுபட நேரிட்டது.

தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டியவரும், பிற்காலச் சோழப்பேரரசைத் தோற்றுவித்தவரும் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியுமான குருமகாசன்னிதானம் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் பெருமுயற்சியில் கி.பி.785 முதல் கி.பி.1279 முடிய 500 ஆண்டுக்கால இடைவெளியில் தமிழகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டிட்ட பிற்காலச் சோழப்பேரரசு உருவாயிற்று. இப்பேரரசே சங்க காலத்துக்குப்

பிறகு தமிழ்மொழி தழைக்க, தமிழர் சமயம் தழைக்க, தமிழர் நாகரீகமும், பண்பாடும் தழைக்க உலகளாவிய பெருமுயற்சியினை செயலாக்கிற்று. பிற்காலச் சோழப்பேரரசின் அரச பரம்பரையின் முழுமையான சமயப்பற்றுதான் சிற்பங்கள் நிறைந்த கோயில்களைக் கலைக் கருவூலங்களாக்கின. திவ்வியப் பிரபந்தங்களையும், திருமுறைகளையும் தொகுக்கச் செய்தன. சாத்திரங்களும், புராணங்களும், பரணிகளும், உலாக்களும், காப்பியங்களும் வானோக்கி வளரச் செய்தன. உலக வரலாற்றில் எந்த ஒரு பேரரசும் செய்ய முடியாத இலக்கிய மறுமலர்ச்சி, கலை மறுமலர்ச்சி, சமய மறுமலர்ச்சி, சமுதாய மறுமலர்ச்சி, அறிவியல் மறுமலர்ச்சி முதலிய பல துறை மறுமலர்ச்சிகளை உருவாக்கிய பேரரசினை உருவாக்கியவர் வரலாற்றைக் கருவாகக் கொண்ட முயற்சியே நமது முயற்சி. எனவே, நாம் யாரையும் தேடி ஓடி அலையத் தேவையில்லை. நம்மைத் தேடி நாடி வருபவர்களை ஓடோடிச் சென்று, எதிர்கொண்டு அழைத்து வரவேற்று அவர் விரும்புவனவற்றை வாரிவாரி வழங்கத் தயாராக இருப்பவர்களே நாம் என்ற தெளிவான உணர்வோடு செயல்பட வேண்டும் தாங்களும், தங்களால் உருவாக்கப் படுபவர்களும். நாம் நம் காலம் வரை தொடர்பின்றி பல காலக் கட்டங்களில் நிறுத்தப்பட்டு விட்ட சமய முயற்சிகள் அனைத்தின் தொகுப்பாவோம். எனவே, நாம் வகுப்பவையே என்றென்றும் வழியாக, வழித்துணையாக அமைந்திடும் என்ற உணர்வோடு செயல்படுக.

அன்பு

சித்தர்

//உண்மை நகல்//



# செயல் விளக்க அறிவிப்பும் செயல்திட்டக் குருவாணையும்

30/11/1983இல் ஞாலகுரு சித்தர் கருவூரார் அருள்மிகு ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப் பத்திரக்காளி சன்னிதானம் அவர்கள் சமூகத்துக்கு விடுக்கும் செ.வி.அ.-செ.தி.கு.

1. அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! யாவும் உண்மையான வெற்றியைப் பெற்று நன்மையை நல்கிடும்.

2. **'மதத்தை ஒரு விஞ்ஞானமாக்கி யார் வேண்டுமானாலும் அநுபவப் பூர்வமாக மதத்தின் பேருண்மைகளை அறியலாம், ஆராயலாம், உணரலாம், பயன்படுத்தலாம், மத விஞ்ஞானி யாகலாம்'** என்ற பகுத்தறிவுப் போக்கைச் சமயத்துக்கு வழங்கி சமுதாய மறுமலர்ச்சிப் பணியைத் துவக்கியுள்ளோம் நாம். நமக்குள் தனிமனித ஆதிக்கம், சர்வாதிகாரம்; வழிநடத்தல் ... கூடவே கூடாது. நம்மவர்கள் சித்தர் நெறியை விளக்கும் அடிப்படைக் கருத்துக்களை விளக்கும் எமது அஞ்சல்கள், கட்டுரைகள், அச்சிட்ட அறிக்கைகள், சிறுநூல்கள்... முதலியவற்றை அன்றாடம் இரண்டரை (21/2) மணி நேரம் (ஒரு சாமம் = யாமம்) படித்தேயாக வேண்டும். அதுதான் கருத்து விளக்கம் தரும். இதேபோல் பகலில் 11-11/2 அல்லது இரவில் 11-11/2 ஏதாவது ஒரு நேரம் கலசப் பூசை செய்தேயாக வேண்டும். அதுதான் பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளை உணரவும், திருவருள், தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருள், குருவருள், உலக அருளாளர் துணை [ஆதரவு] முதலியவைகளைப் பெற்றுத் தரும். இதன்மூலம் நம்மவர்கள் அருட்பணிக்குரிய ஆற்றலைப் பெற்றிடுவார்கள்.

3. எப்படியும் இந்தியாவில் ஒவ்வொரு மொழியினரும், தனித்தனி உரிமை ஆட்சி பெற்றிடுவர். மொழிவழி இனங்கள், விடுதலைபெற்ற பிறகு மொழிவெறி, மொழி ஆதிக்கம், மொழிசுரண்டல், மொழி ஏகாதிபத்தியம் ... முதலியவைகள் ஒழியும். அதன்பிறகு, உருவாகும் இந்தியக் கூட்டாட்சி [The United States of India] "ஐக்கிய மாநில இந்தியக் கூட்டாட்சி அரசு" என உருவாகும். அப்பொழுது எல்லா இனங்களும் செழிக்கும். அதற்குரிய விழிப்புணர்வு உருவாகிட **இந்திய வரலாறு** என்று இன்றுள்ள மோசமான, மோசடியான வரலாறு முழுமையாகத்

திருத்தப்படல் வேண்டும். வின்சென்ட் சிமித் (Vincent Smith) என்ற இங்கிலாந்துக் காரன் தனிமனித முயற்சியில் தேடித் தொகுத்த செய்திகளே இன்று வரை இந்திய வரலாறு என்று நம்பப் படுகின்றது. பதினெண்சித்தர்கள் தமிழ்மொழியில் உலக வரலாற்றையே வழங்கியுள்ளனர் என்ற பேருண்மை முதலில் இந்தியர்களுக்காவது புரிய வேண்டும். அதற்குரியன எழுத்து, பேச்சு, செயல் என்ற மூன்று நிலைகளாலும் கடந்த இரண்டு நூற்றுண்டுகளாக [சித்தர் ஏஎனம்பட்டியார் காலத்திலிருந்து] எடுக்கப்பட்டும் உரிய பயன் விளையவில்லை. எனவேதான், எம் தந்தை எம்மை தன்னிச்சையாக உருவாக்கிச் செயல்படச் செய்துள்ளார். யாமும் பல நூருயிரக் கணக்கானவர்களை உருவாக்கிச் செயல்படச் செய்தோம். பெரும்பாலானவர்கள் தன்னல வெறியர்களாக, பேராசைக் காரர்களாக, குறுகிய கண்ணோட்டம் உடையவர்களாகப் போய் விட்டார்கள். எனவேதான், “நிறுவன நிர்வாகக் கட்டமைப்பும் ஒழுங்கும்” உருவாக்குகிறோம் யாம். உணர்ந்தும்! உணர்த்தியும்! செயல்பட உங்களைப் போன்றோரையும் உருவாக்கியுள்ளோம். **நீங்கள்தான் பொறுமையுடனும் பொறுப்புடனும் செயல்படல் வேண்டும்.** உங்களைப் போன்றோரால்தான் செயல்திட்டங்கள் கண்டிப்போடு செயலாகும்.

(a) உடனடியாக நீலமேகம்பிள்ளை அச்சிட்ட ‘அருளுலக ஆட்சிமொழி’ 1000 (ஆயிரம்) நகல்கள் தேவை. **காலதாமதம் கூடவே கூடாது**. அவரைக் கண்டிக்கிறோம்; நேரில் தர வேறு அச்சிடட்டும். குருவாணை 30/11/1983.

(b) சிறுமுகையூரில் யாம் ரூ.301.00 காணிக்கைப் பணத்தைக் கொடுத்தும் இரவிந்திரன் ‘ஓர் இந்துமத விளக்கம்’ அச்சடித்து இன்னும் அனுப்பவில்லை. கண்டிக்கிறோம். உடனே, **சிலநூறு பிரதிகளாவது தேவை.** (1000 அவசியம்). அச்சடித்து அனுப்பும் பொறுப்பை அவனிடம் ஒப்படைக்கிறோம். குருவாணை 30/11/1983.

(c) மேலமடைப் பாண்டியன், வேம்படியான் மணி ஆகிய இருவரையும் அச்சிடுமாறு சில கட்டுரைகள் அனுப்பியுள்ளோம். அவற்றை அவசியம் அச்சிட்டு ஒவ்வொன்றிலும் 1000 பிரதிகளாவது அனுப்புக. சென்னை வட்டாரத்தில் இவை தேவை. குருவாணை 30/11/1983.

(d) ஆங்காங்கே அ.வி.தி. நிலையங்களும், இ.ம.இ. கிளை அலுவலகங்களும் அமைத்திடுக. நம்மவர்கள் மின்னல் வேகச் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ள வேண்டும். குருவாணை 30/11/1983.

(e) கிளை அலுவலகப் பதிவு அட்டைகள், உறுப்பினர் சந்தா புத்தகம் அச்சடித்தால்தான் நாம் வலிமைப் படுவோம். இல்லையேல் அரசியல், சமய, சமுதாயக் கலை, இலக்கியத் துறையினர் நம்மை **விழுங்கிட முயல்வார்கள்**. இவர்கள் பணம், பதவி, புகழ், ... முதலியவற்றின் சுவையை அறிந்தவர்கள். நாம் எச்சரிக்கையோடும் வடிவமைப்போடும் செயல்படல் வேண்டும். குருவாணை 30/11/1983.

(f) “இந்திய விடுதலை” கேட்டுப் போரிட்ட உண்மையான தீவிரவாதிகள் மூடி மறைக்கப்பட்டுச் **சமய சமுதாய கலை இலக்கியப் பண்பாட்டு விரோதிகளும், துரோகிகளும், இந்திய விடுதலை வரலாற்றின் தலைவர்களாக** விளம்பரம் செய்யப்பட்டு விட்டனர். இந்த மோசடியான, மோசமான வரலாற்றை விளக்கும் தரம், தீரம், திறம், வீரம், மறம், அறம்... நம்மிடம்தான் உண்டு. பிருமணர்கள் (பிற + மண்ணினர் --> அன்னியர்) இந்திய மொழிகளை, இனங்களை நலிவடையச் செய்து ஒரு புதிய **“இந்திய மாயை”** உருவாக்கப் பார்க்கிறுர்கள். இது தவறு. மாபெருந் தோல்வி பெறும்.. “சமசுக்கிருத மொழியைத்தான் இந்தி என்ற பெயரால் திணிக்கிறுர்கள். இந்துமதத்தின் பெயரால் பல சாதிகளை உண்டாக்கி மக்களை அடிமைப்படுத்திச் சுரண்டியும், ஏமாற்றியும் வாழ்ந்த பிருமணர்கள்தான்; இன்று ‘இந்தியா’ என்ற மாயாவாத அரசியலின் பெயரால் பல கட்சிகளை உண்டாக்கி மக்களை அடிமைப்படுத்திச் சுரண்டியும் ஏமாற்றியும் வாழுகிறுர்கள். இவர்களின் **வேதநெறிக்குரிய இந்துமதம்தான் மக்களை மயக்கும் மது; முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடும் சாதனம்; முதலாளிகளுக்குப் பாதுகாப்பு; ஏழையை மாயாவாதத்தால் அடங்கி ஒடுங்கி வாழச் செய்வது; தீண்டாமையைப் போதிப்பது; சாதிவெறிகளையும், சண்டைச் சச்சரவுகளையும் வளர்ப்பது; அறியாமை, மடமை, மூடநம்பிக்கைகளைக் காப்பாற்றுவது; காட்டுமிராண்டித்தனங்களைப் புகுத்துவது.....** எனவே, பிருமணிய மறுப்பும் வெறுப்பும் விரைவில் மாபெரும் போராகவே மாறிப் பாரதப் போரின் அழிவு போன்ற அழிவை விளைவித்தால்தான் இந்நாடு நிலையான செழிப்பையும், செழிப்பைக் காக்கும் விழிப்பையும் பெற்றிடும். இதை உணர்ந்து செயல்படும் உண்மைத் தலைவர்களே இந்திய மறுமலர்ச்சிச் சிற்பியாவார்கள்.” என்று எம் தந்தை ‘இந்தியாவின் வருங்காலம்’ என்ற நூலில் எழுதியிருப்பதை இங்கு குறிக்க விரும்புகிறோம். புரிந்து செயல்படுக!

5. (a) இன்றுள்ள இந்திய அரசியல்வாதிகள்; ‘இந்திய விடுதலைத் தலைவர்களின் பரம்பரை...’ என்று உரிமை பாராட்டுவதால் ‘இந்திய விடுதலை வரலாறு ஒரு மாயை! பொய்! மோசடி! தவறுனது!’ ... என்ற பேருண்மையை விளக்கியேயாக வேண்டும்.

(b) முப்பத்தேழாண்டுகள்(1983இல்) ஆகியும் நோயாளிகள், பிச்சைக்காரர்கள், அனுதைகள், ஆதரவற்ற பெரியவர்கள், வேலையில்லாத இளைஞர்கள்... தெருத்தெருவாகத் திரியும் நிலை

மாறவே இல்லை. ஆனால், உலக அரசியல் பற்றிய விழாக்களும், மாநாடுகளும், பிறவும் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் கொண்டாடப் படுகின்றன. விலைவாசி ஏற்றம், மொழிப்போர், பணச்சண்டை, பதவிச் சண்டை, இனச்சண்டை, சாதிவெறி, மதமாற்றம்.... எனும் குறைகளைப் பேசவே மறுக்கும், மறக்கும் அரசியல் தலைவர்களே அதிகம். இதற்கு முடிவு யார் செய்வது? எந்தத் தத்துவத்தால் மக்களின் கவலைகளுக்கும் தொல்லைகளுக்கும் முடிவு தரமுடியும்? அதுதான் சித்தர் நெறி; அதுதான் இ.ம.இ. அ.வி.தி. அருளாளர்கள்......

(c) ***எம் தந்தை 'கம்யுனிசத்திலிருந்து விலகுகிறேன்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைகளின் ஒரு கண்ணோட்டம்.....***:

"கார்ல் மார்க்சு

(i) தொழில் வளம் நிறைந்த இங்கிலாந்தில் புரட்சி நடக்கும் என்று கூறினார். ஆனால், விவசாய நாடுகளான இரசியாவிலும், சீனாவிலும்தான் புரட்சி நடந்தது.

(ii) கம்யுனிச நாடுகள் ஒன்றுபட்டு இணைந்து உலகத் தொழிலாளர்கள் ஒற்றுமைக்கும் விடுதலைக்கும் உயர்வுக்கும் பாடுபடும் என்று கூறினார். ஆனால், கம்யுனிச நாடுகள் ஒன்றையொன்று தாக்குகின்றன. போரிட்டு மாறுபட்டு வேறுபட்டு நிற்கின்றன. கம்யுனிச நாடுகளில் தொழிலாளர்கள் சங்கம் வைத்துப் போராடித்தான் நன்மை பெற முடிகிறது. தொழிலாளர் நலவிரோதப் போக்கும் நோக்கும் கம்யுனிச ஆட்சியிலும் உள்ளது.

(iii) கம்யுனிசம் நாடு, இனம், மொழி, வட்டாரம் ... என்ற குறுகிய எல்லைகளை உடைத்துத் தகர்த்து உலகம் முழுவதும் தொழிலாளர் ஒற்றுமையை உருவாக்கும் என்றார். ஆனால், கம்யுனிச நாடுகளில் இனப்போர், கொலைவெறி தாண்டவமாடுகிறது. மொழி ஆதிக்க எதிர்ப்பு முகாம்கள் வளருகின்றன. கம்யுனிசத் தலைவர்களுக்கிடையே வட்டார வெறியால் போராட்டமும் பூசலும் சண்டையும் நிலைத்து வளருகின்றன. இந்தியாவில் என்றைக்கும் கம்யுனிசம் வளர முடியாது என்பது வெட்டவெளிச்சமான உண்மை. பணக்காரர்களும், சாதியில் உயர்ந்தவர்களும், மதவெறியர்களும், வட்டார வெறியர்களும், பதவி வெறியர்களும், ஒற்றுமைப்படும் எண்ணமே இல்லாதவர்களும்தான் இந்தியக் கம்யுனிசத்தை இயக்குகிறார்கள். இந்நிலை மாறவே மாறாது. கம்யுனிசமும் வளராது.

(iv) மார்க்சியத்தை ஆங்கில மொழியிலோ, செர்மன் மொழியிலோ, இரசிய மொழியிலோ, சீன மொழியிலோ முழுமையாகப் புரியவே முடியாது. **பிரஞ்சு மொழியில்தான் புரிய முடியும்.** இதற்குரிய வாய்ப்பு இந்தியக் கம்யுனிசத் தலைவர்களுக்கே கிடைக்கவில்லை. தொண்டர்களுக்கு எப்போது கிடைக்கும்? மக்களுக்கு எப்படிக் கிடைக்கும்? **மார்க்சீயம் இந்துமதத்தின் ஒரு பிரிவாக அறிவிக்கப்பட்டு பொதுமக்களால் ஏற்கப்பட்டால்தான் வெற்றி கிடைக்கும்**. நான் மார்க்சீயத்தை விடப் பதினெண்சித்தர்களின் அரசபாரம்பரியம், குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் எனும் மூன்றும் தரும் சமுதாய அரசியல் பொருளாதாரச் சித்தாந்தங்களும் உயர்ந்தவை, பயனுடையவை... என்று உணர்ந்தே கம்யுனிசத்தை விட்டு விலகுகிறேன்....."

....என்று எழுதியதை இங்கு அப்படியே குறிக்கிறோம். உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படுக!

6. **எந்தவித முறையான அரசியலறிவோ! பயிற்சியோ! வாழ்வியல் நுகர்ச்சியோ! பொதுநல நாட்டமோ! ... இல்லாதவர்கள்தான் பெரும்பாலும் இன்றைய அரசியல்வாதிகள். எனவே, பல நல்லவர்கள் அரசியல் தலைவர்களாக இருந்தும் கூட மக்களுக்கு நன்மை ஏற்பட வில்லை**. இதை நன்குணர்ந்த மகான்களும், ஞானிகளும், தவசிகளும்... பிடிவாதமாகப் போராடி எமது தனிமைத் தவத்தைக் கலைத்து எம்மை நாட்டுக்குள் அனுப்பினர். ஆனால், சீர்திருத்தமே செய்ய முடியாத அளவு அனைத்தும் கெட்டுவிட்டன. இனிமேல் மிகத் தீவிரமான (drastic steps) நடவடிக்கை கூடப் பயன் தராது. அனைத்தையும் அன்பு, அமைதி, சமாதானம், விட்டுக்கொடுத்தல், விளங்க வைத்தல்... எனும் அருள்நெறியால்தான் நலமாக்க முடியும். (Divination is better than drastic approaches to redeem India) **'இந்தியாவைச் சீர்திருத்தி அல்லது காப்பாற்றத் தீவிரவாதத்தை விடத் தெய்வீக முறையே சிறந்தது'** என்று உலக மாபெரும் மார்க்சீயச் சிந்தனையாளரும், பகுத்தறிவு மேதையும், அரசியல் வித்தகரும், மகாஞானியுமான சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமிபிள்ளை அவர்களே கூறி சென்று விட்டார். அவரின் நேரடி வாரிசாகவும், தத்துவ வாரிசாகவும் உள்ள யாம் அவரைப் பின்பற்றியே செயல்படுகிறோம். எனவே, நமது **மதவழி மறுமலர்ச்சிப் பணி**களை விரிவு செய்யும் திட்டத்தை இதில் அறிவிக்கிறோம். உடனடியாகச் சுடுகாடு, இடுகாடு, நன்காடு, புதைகாடு, விடுகாடு, நடுக்காடு, அடவி, அருவிச்சாரல், மலைச்சாரல், மலைமுகடு, ஆற்றுப்படுகை, ஆற்றிடைக் குறை, கடல், கடலிடைத் தீவு... முதலிய இடங்களில் உள்ள உருவங்கள், அருவுருவங்கள், அருவங்கள் உயிர்த்தெழுந்து பெருவீரம் காட்டிப் போராடத் தயார் செய்யப்படல் வேண்டும். கோயில்களுக்குள் உள்ள கருவறை வாழ் நாற்பத்தெட்டு வகையினரும் சூழ்நிலைக் கைதிகளாக, சுகபோகப் பிரியர்களாக உள்ளார்கள். எனவே, நமது செயல் வெட்டவெளிக் கருவறைகளாக, யாகச்சாலைகளாக, வேள்விச் சாலைகளாக, சத்திச்சாலைகளாக, சித்திச்சோலைகளாக,

பத்திப்பாட்டைகளாக, அருட்கோட்டங்களாக, குருகுலங்களாக.... மாறட்டும்! மாறட்டும்! மாறட்டும்! முதல் நிலையாக ஆலவாய் மூதூர் தத்தனேரிச் சுடலைப் பத்திரகாளியின் பெயரால் அருட்பட்டப் பெருவீரர்கள் தயாராகிறார்கள். ... ... ...

... ... ... ... ...

அனைவருக்கும் படித்துக்காட்டி அறிவிப்புச் செய்க.

திருவாணை, குருவாணை

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

அன்பே சிவம்.

அன்பு

ஞாலகுரு சித்தர் கருவூரர்

30/11/1983

**//உண்மை நகல்//**

# சித்தர்களின் ஏட்டில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி பற்றியுள்ள குறிப்பு

“.... பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி “குருநிலை பதினெட்டு எட்டினார்*” [*’எட்டினார்’ என்ற சொல் சில ஏடுகளில் ‘கிட்டினார்’ என்ற பாடவேறுபாடு பெற்றுள்ளது] என்ற நிலையையும், “திருவோலக்க நிலை முப்பதும் பெற்றார்*” [*’பெற்றார்’ என்ற சொல் சில ஏடுகளில் ‘உற்றார்’ என்ற பாடவேறுபாடு பெற்றுள்ளது] என்ற நிலையையும் **எய்துதல் வேண்டும்** ....” என்ற குறிப்பு குருபாரம்பரியத்திலும், பூசாவிதி, பூசாநெறி, பூசாமுறை, குருமார் ஒழுக்கம், சூத்திறம், சூத்திரம், சூத்தரம் ... முதலிய பல சித்தர் நூல்களிலும் காணப்படுகின்றது.

## குருநிலை பதினெட்டு

**தேவகுரு, வேதகுரு, ஓதகுரு, குருதேவர், நாதகுரு, போதகுரு, வாதகுரு, மோதகுரு, சுரகுரு, அசுரகுரு, அமரகுரு, வானகுரு, கணகுரு, முனிவகுரு, இருடிகுரு, அருவுருவகுரு, ஞாலகுரு, ஞானகுரு.**

## திருவோலக்க நிலை முப்பது:

**பத்திஆழி, சத்திஆழி, சித்திஆழி, முத்திஆழி,**

**அமரத்தரு, இறைமைத்தரு, இருடித்தரு, தெய்வீகத்தரு,**

**தவத்திரு, மறைத்திரு, மந்திறத்திரு, வேள்வித்திரு,**

**தாந்தரீகமூர்த்தி, ஞானமூர்த்தி, மந்தரமூர்த்தி, வேதமூர்த்தி,**

**நான்மறைவித்து, நான்முறைவித்து, நானெறிவித்து, நான்வேதவித்து,**

**ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி,**

**அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார், நல்லிலக்கண மார்புடையார், நூற்றெட்டுத் திருப்பதிச் சக்கரம் கொண்டார், இருநூற்று நாற்பத்துமூன்று சத்திபீடச் சக்கரம் அடைந்தார், ஆயிரத்தெட்டுச் சிவாலயச் சக்கரம் உறைந்தார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் கருவூரர்.**

இக்குறிப்பின்படியே பயிற்சிக்குரிய பதினெட்டாண்டுகளில் ஏறத்தாழ அனைத்து அருட்பட்டங்களுக்குரிய முயற்சிகளில் முயற்சியும், முதிர்ச்சியும், தேர்ச்சியும் பெற்றோம் யாம். பிறகு, முயற்சிக்குரிய பதினெட்டாண்டுகளில் இந்த அருட்பட்டங்களை அநுபவத்துக்கு உரியதாக்குவதில் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்றோம். இவற்றிற்குப் பிறகே முறையாக இல்லறமேற்று அருட்பணி விரிவாக்கத் திட்டங்கள் மூலம் அருளாட்சிக்கு அடிகோலுகிறோம். இருந்தும் ... இன்றைய நிலையில் செயல்தேக்க நிலைகள் உருவாகியுள்ளன. உணர்ந்தும், உணர்த்தியும், பொறுமையுடன் பொறுப்பாகச் செயல்படுவோமாக!

31/12/1982 (ஒப்பம்)

[ஞாலகுரு சித்தர் கருவூரர்]

1/1/1983

# அன்புள்ள சேவுக !

அன்புச் சேவுக!

யாம் சாதாரணச் சித்திகளைப் பெற்ற அருளாளர்களைப் போல் ஓரிடத்திலமர்ந்து கொண்டு எம்மைக் காணவருகிறவர்களை எம்முடைய அருள் எல்லைக்குள் கொண்டு வந்து அவர்களுடைய அக, புற போராட்டங்கள் தற்காலிகமாக அமைதி யடையும்படிச் செய்து செயல்பட்டிட்டால் இந்நேரம் உலகம் முழுவதும் எமக்கென ஒரு பெரிய மாபெரும் கூட்டத்தையும் எண்ணற்ற அமைப்புக்களையும் பெற்றிருக்க முடியும். ஆனால், யாம் அப்படிப்பட்ட மாயா நிலைச் செயல் புரிந்து எம்மை மட்டும் வளர்த்துக் கொள்ள விரும்பியதே இல்லை.

எனவேதான், யாம், இம்மண்ணுலகில் இதுகாறும் தோன்றிட்ட அனைத்து வகையான அருளாளர்களின் வாழ்வியல்களையும் சாதனைகளையும் இணைத்துப் புதுமைப்படுத்தி உலகந்தழுவிய நிலையான நன்மைகளை விளைவிக்க 'அருட்புரட்சி' முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

நிலத்திலிருந்து தங்கம் கலந்து மண்ணை வெட்டியெடுத்துக் குவிப்பதுபோல்தான் இதுவரை உலக அருளாளர்கள் அண்டபேரண்டத்துள் புதைந்து கிடக்கும் அருட்சத்திகளை வெளிக்கொணரும் முயற்சியில் மட்டுமே தங்களை ஈடுபடுத்திக் கொண்டு சென்று விட்டார்கள். அவர்கள் செய்யாதது தங்கத் தாதுகளை ஒன்று திரட்டி கட்டித் தங்கத்தை உருவாக்குவதும் அப்படி உருவாக்கிய தங்கத்தை உலக மக்களின் நல்வாழ்விற்குப் பயன்படும்படிச் செய்வதும் போன்று தங்களுடைய வாழ்வின் சாதனைகளை வடிவமைப்புப் படுத்தி என்றென்றும் அருட்சத்தி மக்களின் நன்மைக்கு பயன்படும்படியான செயல்திட்டத்தை வகுக்காமல் சென்றதால் இக்குறையை நிறைவு செய்யவே இவ்வியக்கத்தைத் துவக்கிச் செயல்படுகின்றோம். இதுதான் எமது தத்துவம், குறிக்கோள், சட்ட திட்டம்.

அன்பு நண்ப! அருளுலகில் மாணாக்கர்கள் குருவைத் தேடிக் கண்டு பிடித்தாலும் அக்குருவின் பின்னால் பலகாலம் அலைந்து பலவாறு தொண்டுகள் புரிந்து அதன்பிறகே குருவின் அருளைப் பெறுவதென்பதே மிகப்பெரிய மரபாக இருந்து வருகின்றது. இதே நேரத்தில் அருளுலகில் ஒருசில குருமார்கள் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் தேடியலைந்து விரல்விட்டு எண்ணக்கூடிய சில மாணாக்கர்களை மட்டுமே உருவாக்கி அருள் வழங்கித் தங்களின் நினைவாகப் புதியதொரு கூட்டத்தை உருவாக்கிச் சென்று விடுவதும் மரபாக இருக்கின்றது.

யாம், இப்படிப்பட்ட அருளுலகில் தான் பாரம்பரியமாகப் பெற்ற அருளையும் பயிற்சிகளாலும் முயற்சிகளாலும்; கல்விக் கேள்வித் தொண்டுகளாலும், ... பெற்றிட்ட அருட்செல்வங்களையும் இப்புவிப்பரப்பின் பெரும்பாலான பகுதிகளுக்கு தலைமேல் தூக்கிச் சென்று கூடைக்காரி போல் 'அருளோ அருள்' என்று கூறி வாரிவாரி மலிவுவிலைக்கு வழங்கிப் பார்த்துவிட்டு; இந்தியத் துணைக்கண்டத்திலும் இதனைச் சார்ந்த நாடுகளிலும் உள்ளவர்களுக்கு தாங்கள் அறிய கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக இனாமாகவே வழங்கிவிட்டோம். தம்மையும் புரியாமல், எம்மையும் புரியாமல் சிறுபிள்ளைத் தனமான செயல்களில் ஈடுபட்டு வீணாகிக் கொண்டிருக்கும் அருளுலக மாணாக்கர்களை எண்ணி வருந்துகிறோம்.

உலக மதங்களுக்கெல்லாம் மூலமாகவும், தாயாகவும் இருப்பது இந்துமதமே. இந்துமதத்துக்கு மூலமாகவும் தாயாகவும் இருப்பது தமிழினமே. எனவேதான், நமது இனமக்களான தமிழர்களை அருளுலகத் தலைவர்களாக உருவாக்கும் பணியில் முழுமையாக ஈடுபட்டுள்ளோம் யாம். ஆனால், நம்மவர்கள் ஊசலாட்டம் மிகுதியாக உடையவர்களாக இருக்கிறார்கள். இதனால், இவர்கள் சில அடிகள் முன்னோக்கி நடந்த உடனேயே பயந்து பல அடிகள் பின்னோக்கி நடந்து விடுகிறார்கள்.

அதாவது, எல்லா மதவாதிகளையும் போல நமது இயக்கச் செயல்திட்டங்கள் வெறும் பொழுது போக்குக்குரியனவைகளாகவோ குறுகிய வட்டாரத்தார்களுக்கு மட்டுமே பயனளிக்கக் கூடியவைகளாகவோ, ஆரிய வேதநெறிக்கு அடிமைப்பட்டதாகவோ இல்லை என்பதனால்தான்

குருட்டு மதவாதிகளும், தன்னல வெறியர்களும், சந்தர்ப்ப வாதிகளும் விலகிச் செல்கின்றனர். எனவே, களைகள் களைவதைப் பற்றி கவலையடைய வேண்டாம்.

அன்பு

ஞாலகுரு சித்தர் கருவூரர்

---

5.1.95

# 1995ஆம் ஆண்டு பொங்கல் வாழ்த்து செய்தி

# "புறப்பட்டேன்"

1. மலைமுகடுகள் தங்கி அலைந்து தங்கி
2. நிலையானவை புரிந்திட ஆள் கிடைக்காது
3. நிலையாமை அஞ்சி விரைந்து புறப்பட்டேன்
4. நிலையானவற்றை எப்படியும் உலகுக்குக் கூறிடும் கடமை
5. அலைகடலென உள்ளத்தே ஆர்ப்பரித்து துரத்த
6. விலையிலா பருவநனவு மலைப்பை விலையாக்கிட
7. தலைதெறிக்கும் வேகத்தோடு விரைந்து புறப்பட்டேன்
8. மலைமுகட்டுச் சந்தனமும் மூலிகையும் தடுத்திட
9. உலைக்கல நெருப்பாய் ஆக்கப் பணியில் முனைந்தேன்
10. அலைக்கழிப்பு அகன்றது ஆர்ப்பரிப்பு பிறந்தது
11. நிலையான செய்தியால் அவனி காப்பேன்
12. நிலையாமை மலைப்பின் நினைப்பு இனியேது
13. கொலைக்கள அரசியலே கொலைமறுப்பு ஆன்மீக வழியாயிற்று
14. கொள்ளையரிடையே நல்லவர் செயலுற்றுல்தான் அருளாட்சி
15. மூலைமுடுக்கெல்லாம் இதைப் புரியவைத்திடவே புறப்பட்டேன்
16. மலைக்காட்டுப் பசுமை மயக்கித் தடுத்தது
17. வேலையில் கருத்திருத்தி வெடுக்கெனப் புறப்பட்டேன்
18. மலைக்காட்டு மலர்கள் சிரித்தன நின்றேன்
19. சிலைக்கரங்கள் அசைந்து தடுத்தன மிரண்டேன்
20. ஓலைக்குடில்களின் ஓவியங்கள் பேசின மீண்டேன்
21. சோலைக்குயில்கள் கூப்பிடக் கூப்பிட நில்லாமல் புறப்பட்டேன்
22. மலைச்சாரல் முல்லைகள் நெஞ்சோட்டத்தை மட்டுப்படுத்தின
23. மலையருவி அழகுகள் சிந்தையோட்டத்தை கோட்டப்படுத்தின
24. சோலைக்கனிகள் சலிப்பை களைப்பை நினைப்பூட்டின
25. அலைந்தோடும் மேகக் கூட்டங்களை வலைவீச்சுத் தடுத்திடும்
26. மட்டுப்பட்டேன் கட்டுப்படவில்லை திட்டங்களை யெண்ணிப் புறப்பட்டேன்
27. காட்டைவிட்டு நாட்டுக்குள் வந்தேன் அடடா! ஓ! அடடா!
28. வீட்டுக்குவீடு நாட்டைக் கெடுப்போரை நம்பிடுவோர்
29. ஏட்டுக்கு ஏடு நல்லவரைக் கேலிசெய்யப் போட்டாப்போட்டியே
30. கோட்பாடுகளால் திட்டங்களால் ஈட்டுவோம் அருளாட்சியெனப்

31. புறப்பட்டேன்! புறப்பட்டேன்!! புறப்பட்டேன்!!! புறப்பட்டேன்!!!!
32. ஊர் ஊராக தெருத்தெருவாக வீடுவீடாகச் சென்றேன்
33. எண்ணற்றோரைக் கண்டேன் எல்லோரும் கண்ணற்றோரே
34. என்னென்பேன்! ஓ! அடடா! என்னென்பேன்! ஓ! அடடா! ஓ! அடடா!
35. ஆற்று மணலைச் சர்க்கரையென விரும்பி வாங்கிடும்
36. அப்பாவிகளிடம் நான் எழுதியென்ன? பேசியென்ன?
37. என்றென்றைக்கும் இருளாட்சி தவிர அருளாட்சி வர வழியேது?
38. சித்தரடியான்களான பொன்னடியான்களைப் புண்ணடியான்களாக்கிடாமலிருக்கப் புறப்பட்டுவிட்டேன்
39. புறப்பட்ட இடம் நோக்கிப் புறப்பட்டு விட்டேன் நான்
40. வென்றேனில்லை இன்று நான் என்றாலும்
41. வென்றிடுவேன் என்றாவதொருநாள் நானென நம்புகிறேன்
42. போர்ப்பரணி பாடிடுவதை என்றென்றும் தொடர்வேன்
43. யார் கிடைத்தாலும் பாடி வீட்டில் சேர்த்திடுவேன்
44. ஏது தோது கிடைத்தால் பாசறை அமைப்பேன்
45. அருட்போருக்காக வியூகம் அமைப்பதிலே வாழ்வேன்
46. எந்நேரமும் போர்க்கால போர்க்கோலமே எனக்கினி
47. என்செய்வேன் ஓ! அடடா! எரிமலை நெருப்பாகி விட்டது என் நெஞ்சம்!
48. சூறாவளியாகிட்டேன்! அடடா! ஓ! அடடா! அழிவு வழிதான் அருளாட்சி வழியோ!?!?!?

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

அன்பு - சித்தர்

(ஒப்பம்) அந்தணர் அண்ணல்

ஞானாச்சாரியார்

பொன்னேரி 5/1/95 இரவு 10-50 மணி



**BOOK-POST**

To

**If Undelivered please return to**

Forum of Siddharadiyaans
C/O Mr V.Muniraju
Survey No.34, Door No.345
Outer Ring Road, Bellandur Post
Bangalore East - 560103
Cell: 09972130609